அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:

அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:

ஸ்ரீரங்கநாதயதீஸேகரம் ஆஸ்ரயாம:

வேதாந்த லக்ஷ்மணமுநே: பாதரேகாமயம் ஸதா

தததீனப்ருவ்ருத்யாதீம் ஹாரீதம் மாதவம் பஜே

# தேசிகப்ரபந்தம்...பிள்ளையந்தாதி



## பதினான்காம் பாசுரம்

நின்பதம்தன்னிலும் நேரேயெனக்கில்லையன்புகண்டாய்

நின்பதமொன்றிய வன்பரிலும் நேசமில்லை யந்தோ

என்படிகண்டினியென் பயன் ஏதமில் தூப்புலெந்தாய்

உன்படியேயருளாய் உதவாயெனக்குன்னருளே

i u∂ l uħô f ù S ¬ i q ú l j ue ì _’ d õ

தேசிக பக்தி இம்மைக்கும் மறுமைக்கும் அதுவே துணை நமக்கு.ப்ராத்தித்து பெறு.

நின்பதம் தன்னிலும்

நேரேய் எனக்குஇல்லை அன்பு கண்டாய்

உயர்வான தேவரீர் திருவடிகளில் சாக்ஷாத் பக்தியானது சிறிதும் இல்லை

கீதையில் சொன்ன நிலை என் நிலை

பாவி,மூடன்,நராதமன்,

அறிவிலீஅசுர ஸ்வபாவம்

பகவானிடம் அன்பு செய்வதில்லை

.ந மாம் துஷ்க்ருதிநோ மூடா:

ப்ரபத்யந்தே நராதமா:|

மாயயாபஹ்ருத ஜ்ஞாநாஆஸூரம் பாவ மாஸ்ரிதா:|| (பகவத்கீதை)

ஆழ்வார் மனது பகவத் விஷயத்தில்  ஒருமுக நிலை அடையவில்லை  தணல் நடுவில் மாட்டிய எறும்பு நிலையை உதாஹரிக்கின்றார் .

உள்ளமோ ஒன்றில்நில்லாது
ஓசையிலெரிநின்றுண்ணும் *

கொள்ளிமேலெறும்புபோலக்
குழையுமால்என்தனுள்ளம் *

தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம்
தேவராய்உலகம்கொண்ட *

ஒள்ளியீர்! உம்மையல்லால்
எழுமையும்துணையிலோமே

**(திருகுறுந்தாண்டகம்)**

நின்பதம் ஒன்றியவன் பரிலும் நேசமில்லை

ஸாஸ்த்ரவஸ்ய ப்ரமாண ப்ராண ரக்ஷகரான தேவரீரை ஆஸ்ரயித்த, தங்களிடம் தோஷம் சிறிதும் அற்ற, மஹான்களிடமும் அடியேனுக்கு ஸ்நேஹ பாவம் லவேசமும் இல்லை .

பகவத் பக்தியுடையவனிடம் பக்தி இல்லாதவன் மஹா பாவி.

ஆதியந்தமனந்தமற்புதமான வானவானவர்தம்பிரான் *

பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுய்ந்திட *

தீதில்நன்னெறிகாட்டி
எங்கும்திரிந்தரங்கனெம்மானுக்கே *

காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும்
காதல்செய்யுமென்னெஞ்சமே

**(பெருமாள் திருமொழி)**

கீதாசார்யன் அருளிய படியான

ஞானவான்களிடமும் பக்தியில்லை எனக்கு

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஷ்சித் யததி
ஸித்தயே

யததாம் அபி ஸித்தானாம் கஷ்சின் மாம் வேத்தி
தத்த்வத:

**(பகவத்கீதை)**

ஆயிரமாயிரம் மனிதர்களில் யாரேனும் ஒருவன்
பக்குவமடைய முயற்சி செய்யலாம். அவ்வாறு
பக்குவமடைந்தவர்களில் கூட யாரேனும் ஒருவனே என்னை
உண்மையாக அறிகிறான்.

அந்தோ என்படி கண்டு இனி என்பயன்?

இவ்வாறு இருக்க என்னிடம் என்ன குணம் கண்டு அநுக்ரஹம் செய்வீர்?

யதா ஸோம்ய ஏகேன ம்ருத்பிண்டேன ஸர்வம் ம்ருண்மயம் விஞ்ஜாதம் ஸ்யாத் **(சா.6-1-4)**

அதே போல்தான் அடியேனை அறிந்தால் அடியேனின் குண ஹாநிகள் அனைத்தும் அறியப்படும்.

ஆழ்வார் ஸேவை கிடைக்காத கோப ஆர்த்தியில் பரிமள ரங்கனை வினவுகிறார் தன்னை குறிப்பிட்டு கொண்டு

சொல்லாதொழியகில்லேன் அறிந்தசொல்லில் * நும்மடியார்

எல்லாரோடும்ஒக்க எண்ணியிருத்தீர் அடியேனை *

நல்லர்அறிவீர்தீயார் அறிவீர் நமக்குஇவ் வுலகத்தில் *

எல்லாம்அறிவீர் ஈதே அறியீர்இந்தளூரீரே

**(திருமங்கை ஆழ்வார்)**

ஏதமில் தூப்புல் எந்தாய்!

தோஷமற்ற தூப்புல் தலைவனே

கீழே குறிப்பிட்டது போல் தத்துவ ஹித புருஷார்த் விஷய ஞான க்ரஹணத்திலும் தோஷங்கள் ஸம்பவிக்க கூடாது

மந்த்ரோ ஹீந: ஸ்வரதோ வர்ணதோ வா

மித்யாப்ரயுக்தோ ந தமர்த்த மாஹ|

ஸ வாக் வஜ்ரோ யஜமாநம் ஹிநஸ்தி

யதேந்த்ர ஸத்ரு: ஸ்வரதோபராதாத் ||

**(பாணிநி சிக்ஷா-52)**

உலகத்தை சீர்திருத்த நம்மாழ்வார் கொண்டு கவி பாடுவிக்க பகவான் திருவுள்ளம் கொண்டான்.

ஆனால் ஆழ்வாரோ பார்த்து திருத்த பயந்து  கண்ணனின் குண நலனில் ஈடுபட்டார். ஆழ்வார்  பயந்த விஷயத்தை ஸ்வாமி தேசிகன் க்ரந்த நிர்மாணங்களால் திருத்தி பணி கொண்டார். இங்கு ஸ்வாமி தேசிக வைபவ கொண்டாட்டம் நஹி நிந்தா ந்யாயப்படி.

ஆரானுமாதானும் செய்ய *

அகலிடத்தை ஆராய்ந்து அதுதிருத்தலாவதே? * -

சீரார் மனத்தலை வன்துன்பத்தைமாற்றினேன் *
வானோ ரினத்தலைவன் கண்ணனால்யான்.

**(பெரிய திருவந்தாதி)**

உன்படியே அருளாய்

ஸாத்யோபாயம் எனப்படும் க்ருத்யா ரூப ஸங்கல்ப பூர்வக 5 அங்கங்கள் கூடிய அங்கி ப்ரபத்தியை ப்ராட்டியுடன் கூடிய ஏக சேஷித்வமான ஸித்தோபாய ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஆச்சார்யன் மூலம் செய்யவேண்டும் எனவும், இதில்

ப்ரதான பலி ஏக சேஷித்வம் ஸ்ரீமந் நாராயணன், அப்ரதான பலி சமர்பிக்கும் ஜீவன் எனவும்

இதனால் ப்ரபன்னனின் ஸஞ்சித கர்மா மற்றும் இந்த ஜன்மா தவிர மற்றவைக்கு உரித்தான ப்ராரப்த கர்மாக்கள் கழியும் எனவும் உத்ரக்ருத்ய தசையில் நித்ய நைமித்திக கர்மாக்கள் அநுஷ்டித்தலில் எந்த குறையும் கூடாது ,அத்தசையில் ஏதேனும் புத்தி பூர்வக பாவங்கள் ஏற்பட்டால் ஸாஸ்த்ர விஜித ப்ராயச்சித்தம் அல்லது ப்ராயசித்த ப்ரபத்தி செய்யவேண்டும் எனவும் ,தோஷமே போக்யம் என்பது என்றுமே கூடாது என்ற தேவரீர் படிகள் தன்னை

அஸ்மா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்மை சாஸ்யாம்ப்ரதிஷ்டிதம்

**(ஸ்ரீமத் ராமா-ஸு-15-52)**

பிராட்டி நினைவு ஸ்ரீராமனின் அது போல் அவன் நினைவு.

இம்மாதிரி படி அருள வேண்டும் நமக்கு ஆழ்வார் அனுபவிக்கும் படி கீதாச்சார்யனின் அவதார லீலைகள் இங்கு

பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து *

ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்து போன மாயங்களும் *

நிறந்தனூடுபுக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி யுண்கின்ற *

இச்சிறந்தவான்சுடரே! உன்னையென்றுகொல்? சேர்வதுவே

**(நம்மாழ்வார்)**

உதவாய் எனக்கு உன் அருளே

மேட்டு நிலமாய் இருக்கும் அடியேனிடத்தில் மேற்கூறிய படிகள் தேவரீர் கருணையால் பாய வேண்டும் இல்லை எனில் அடியேனுக்கு விடிவில்லை ஸ்வாமி. அநுக்ரஹிக்க வேண்டும்.

பெண்களுக்கு நித்ய அநு சந்தான ப்ரார்தனையால்

க்ஷேமத்தை உண்டு செய்யக் கூடியது கீழ் கூறிய மாங்கல்ய ஸ்தவம்

ஸங்கை: ஸுராணாம் திவி பூதலஸ்தைஸ்

ததா மநுஷ்யைர் ககநே ச கேசரை:|

ஸ்துத: க்ரமாந் ய: ப்ரசகார ஸர்வதா மமாஸ்து
மாங்கள்யவிவ்ருத்த யே ஹரி: ||

**(விஷ்ணு தர்மம் மாங்கள்யஸ்தவம்)**

எதனால் மூவுலகங்களும் தேவர் மனிதர் நலன்பொருட்டு
அளக்கபட்டதோ அந்த திருவடி ஹரி எனக்கு நன்மையை
உண்டாக்கட்டும்.

தொல்லை பழவினையை முதலிய வல்லார் .... இதில்
விசாரம் செய்தால் அந்த தேச விசேஷத்தில் சென்றால்
மட்டுமே ஸாத்யம். அதற்கான இது ஒரு ப்ரார்த்தனா ரூபம் என
சொல்லவும் தட்டில்லை.

மின்னு மாமழைதவழும் மேகவண்ணா!

விண்ணவர்தம் பெருமானே! அருளாயென்று *

அன்னமாய் முனிவரோடுஅமரரேத்த

அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை *

மன்னு மாமணி மாடமங்கை வேந்தன்

மானவேல் பரகாலன் கலியன் சொன்ன

பன்னிய நூல் தமிழ்மாலை வல்லார்

தொல்லைப்பழ வினையை முதலரிய வல்லார்தாமே

**(திருமங்கை ஆழ்வார்)**

… ∫ Ÿ | l z i uŒ ¢ :

மேட்டுநில கடின பரக்ருதிகளான

நம்போன்றோருக்கு ஸ்வாமி தேசிகனே துணை.

**தொடரும். . .**